## மெட்ரோ ரெயில் நிலையத்தில் பணியாற்ற

# 13 திருநங்கைகள் நியமனம்!

சென்னை, பிப். 15–

மெட்ரோ ரெயில் நிலையங்களில் பணியாற்ற 13 திருநங்கைகள் நியமிக்கப்பட்டுள்ளன.

பிரதமர் மோடி நேற்று சென்னையில் வண்ணாரப் பேட்டை–விம்கோ நகர் இடையிலான மெட்ரோ ரெயில் போக்குவரத்தை தொடங்கி வைத்தார்.

நேற்றுமுதல்வண்ணாரப் பேட்டை–விம்கோ நகர் இடையே மெட்ரோரெயில் இயக்கப்பட்டு வருகிறது.

புதிதாக திறக்கப்பட்ட வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையத்தில் பணியாற்ற 13 திருநங்கைகளை சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் பணியமர்த்தியுள்ளது.